**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வத்திராயிருப்பு**

முன்னிலை : திரு. மூ.ராமநாதன், B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், வத்திராயிருப்பு

**2026 ம் வருடம் ஜுன் மாதம் 16 ம் நாள் செவ்வாய்கிழமை**

**குற்றவியல் பல்வகை மனு எண்.264/2026**

முருகன்(A1)

த/பெ. குட்டியான்,

இலந்தைகுளம் ... மனுதாரர்/ எதிரி

/எதிரிடை/

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்

நத்தம்பட்டி காவல் நிலைய

குற்ற எண்.96/2026 ... எதிர்மனுதாரர் / குற்றமுறையீட்டாளர்

இம்மனு இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இன்று இறுதி விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது மனுதாரர்கள்/எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K. வெள்ளைச்சாமி அவர்கள் ஆஜராகியும் அரசு தரப்பில் கற்றறிருந்த அரசு வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**உத்தரவு**

1. மனுதாரர்/எதிரி தரப்பில் பா.ந.சு.ச பிரிவு 480-ன் கீழ் பிணைகோரி பிணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் -**

இவ்வழக்கில் கடந்த 04.06.2026 ம் தேதி இரவு சுமார் 11.30 மணியளவில் புகார்தாரர் பிரபாகரன் மீனாட்சிபுரத்திலுள்ள அவரது காட்டிலுள்ள மோட்டார் ரூமில் 4 எதிரிகள் மோட்டார் ரூமிலிருந்த Starter யை திருடிக்கொண்டு சென்ற குற்றத்திற்காக புகார்தாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில், எதிரிகள் மீது நத்தம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.96/2026 பிரிவுகள் 331(4), 305 BNS - ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**<u>3. மனுவின் சுருக்கம்:-</u>**

மேற்படி மனுவில் மனுதாரர்/எதிரி நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்றும், இந்த வழக்கு மனுதாரர்/எதிரி மீது போடப்பட்ட பொய் வழக்கு எனவும், எதிரி சட்டத்தை மதித்து நடப்பவர் என்றும், தலைமறைவாகிவிட மாட்டார்கள் எனவும், எதிரியை பிணையில் விடும் பட்சம் தகுந்த இரு ஜாமீன்தாரர்களை ஆஜர்படுத்த தயாராக உள்ளதாகவும், எனவே, மனுதாரர்/எதிரியை பிணையில் விடுமாறும் கோரியிருந்தார்.

**<u>அரசு தரப்பு எதிருரை</u>**

4. எதிரி கடந்த 05.06.2026 ம் தேதி கைது செய்யப்பட்டு சிறையில் சிறைவாசியாக இருந்து வருகிறார் என்றும், எதிரியை பிணையில் விடும் பட்சத்தில் இதுபோன்ற குற்றச்செயல் செய்யக்கூடும் என்பதால், எதிரி வெளியூர் சென்று அங்கயே தங்கக்கூடும் என்பதால் விசாரணையின் போது முறையாக ஆஜராக மாட்டார் என்பதால், எதிரியை பிணையில் விட கடுமையாக ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. மனுதாரர் தரப்பில் பிணை வழங்கக்கோரி தாக்கல் செய்துள்ள இந்த பிணை மனுவை அனுமதிப்பதா வேண்டாமா என்பதே தீர்வு செய்ய வேண்டிய பிரச்சனை ஆகும்.

6. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. எதிரி மீது நத்தம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.96/2026 பிரிவுகள் 331(4), 305, BNS - ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் எதிரிகளை பிணையில் விடும் பட்சத்தில் எதிரிகள் மீண்டும் இதுபோன்ற குற்றச்செயல் செய்யக்கூடும் என்பதாலும், நீதிமன்ற வழக்கின் விசாரணையின் போது ஆஜராகாமல் தலைமறைவாகிவிடுவார் என்று குறிப்பிட்டுள்ள நிலையிலும், எதிரியின் மீது முன்வழக்குகள் உள்ள காரணத்தினாலும், இவ்வழக்கில் மற்ற எதிரிகளும் கைது செய்யப்பட்டு சிறைவாசியாக இருக்கும் நிலையிலும், எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றமானது திருட்டு குற்றமாக இருக்கும் நிலையில் மேற்படி வழக்கின் சூழ்நிலையையும், தன்மையையும் கருத்தில் கொண்டும்,

எதிரிகளுக்கு பிணை வழங்குவது நீதியின்பால் உகந்ததல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 16 ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

RAMANATHAN MOORTHI

Digitally signed by RAMANATHAN MOORTHI

மாவட்ட உரிமையியல் மற்றும்

நீதித்துறை நடுவர்

வத்திராயிருப்பு.